விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 053 வள்ளுவர் ஆண்டு 2055 தை 27 சனிக்கிழமை (10.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## இந்தியாவுடன் தரைவழிப் பாதை தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்

### இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி ரணில்

(பெர்த்)

இந்தியாவுடன் தரைவழிப் பாதை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வர்த்தகப் போக்குவரத்துகளுக் காகத் தற்காலத்தில் பயன்படுத்தப் படும் சுயஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது.

எனவே, தென்னிந்தியாவுடன் வர்த் தகத்தை எளிதாக்கும் வகையில் பிராந்தியத்தின் விநியோக மையமாக இலங்கையை 15

### நீதிமன்ற பரிந்துரைகளை புறக்கணித்து

## நிகழ்நிலை சட்டத்தை நிறைவேற்ற முடியாது

### மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அறிவிப்பு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை புறக்கணித்து நிகழ் நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்ற முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### மார்ச் 14, 15, 16ஆம் திகதிகளில்

## யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 14,15,16ஆம் திகதிகளில் நடத்த பல்கலைக்கழக நிர்வாகத் தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக பட்ட மளிப்பு விழாவில் பட்டம் பெற தகுதியான 15

## 7 மில்லியன் முட்டைகள்

### இந்தியாவிலிருந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து 7 மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட் டுள்ளன.

இதன் முதல் பகுதி அடுத்த வாரம் லங்கா சதொச நிறுவனத்திற்கு வழங்கப்படும் என அரச வர்த்தக பல்வேறு சட்ட ரீதியான கூட்டுத்தாபனத்தின் தலை வர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

முன்னர் 35 ரூபாய்க்கு விற்பனை 15

### ஹரிகரன் இசை நிகழ்வு

## முற்றவெளி மைதானத்தில் மக்கள் வெள்ளம்



15

## திருகோணமலை - நாகபட்டினம் எண்ணெய்க் குழாய் இணைப்பு

### இந்தியாவுடன் இலங்கை பல தரப்பு பேச்சு

(கொழும்பு)

திருகோணமலைக்கும் நாகபட்டினத்துக்கும் இடை யில் பல தயாரிப்பு எண்ணெய் குழாய்களை அமைப்பது குறித்து இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருவ தாக இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித் துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ள அமைச்சர்,

இந்திய எரிசக்தி வாரத்தை முன்னிட்டு நான் நேற்று முன் தினம் இந்தியன் எண்ணெய் நிறுவன 15

### யாழ்.சண்டிலிப்பாயில்

## 12 உணவகங்கள் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாயில் 12 உணவகங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தோடு 2 உணவகங்களை சீல் வைத்து மூடுமாறு நீதிமன் றால் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பணி மனைக்குட்பட்ட உணவகங்களில் 15

## வவுனியாவில் யானையின் சடலம் மீட்பு


### ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம், பழையவாடியில் உள்ள தனி யார் ஒருவருக்குச் சொந்த மான பண்ணை காணியில் இருந்து 15

## ஜனாதிபதியின் செயற்பாடு தமிழர்களுக்கு ஏமாற்றம்

### சபையில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

நாட்டில் ஒரு பொருளாதார பிரச்சினை மட்டும்தான் இருக் கின்றது, இங்கு ஒரு இனப் பிரச் சினை இல்லை என்பதைப் போல ஜனாதிபதி தனது உரை யில் அதுபற்றி எந்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நான்' என்பதை 'நாம்' என மாற்றுவதே பிரச்சினைகளுக்கான தீர்வு

## சபையில் அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

"நான்" என்பதை "நாம்" என மாற்ற முடியுமானால், இந்த நாட்டில் நிறைய பிரச்சினைகளுக்கு சுலபமான தீர்வுகளை எட்ட முடியும் என நம்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் பாராளுமன்றில் நேற்றைய தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"புறநானூற்றில் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற வரிகளுக்கு ஒப்ப வாழ்ந்து வருபவன் நான்.

இங்கு "நான்" என்பதை "நாம்" என மாற்றுவதால், நாட்டின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என நான் கருதுகின்றேன்.

'நான்' எனக் கூறும்போது, உதடுகள் ஒட்டாமல் பிரிந்தே இருக்கும். 'நாம்' எனக் கூறும் போதுதான் உதடுகள் ஒட்டியிருக்கும் என கலைஞர் மு. கருணாநிதி கூறுவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டு மக்கள் பட்ட துன்ப, துயரங்களையும், இனிமேல் அனுபவிக்கப் போகின்ற நன்மைகளையும் ஒரு வரலாற்று அறிக்கையாக தனது கொள்கைப் பிரகடன உரையில் முன்வைத் திருக்கின்றார்.

குறிப்பாக "நமக்கு நாமே விளக்குகளாவோம்" என்ற புத்த பெருமானின் போதனையில் ஆரம்பித்து, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை வரிகளையும் இணைத்து அவர் தனது கொள்கைப்பிரகடன உரையினை ஆற்றியிருந்தார். ஒற்றுமை என்பது முக்கியமானது. இதனையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை வரிகள்.

நாட்டிற்காக ஜனாதிபதி எடுத்து வருகின்ற அனைத்து முயற்சிகளுக்கும், இந்த நாட்டு மக்கள் தங்களது ஒத்துழைப்புகளை வழங்கினால், இந்த நாட்டினை வெகு விரைவாக அனைத்து துறை சார்ந்தும் முன்னேற்ற முடியும் என்பதை நாம் இன்று நடைமுறைச் சாத்தியமாக உணர்ந்து வருகிறோம்" என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# கோப் குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மீண்டும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனம் தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், "நியாயம் மற்றும் பொறுப்புணர்வை உறுதிசெய்து, பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதில் எங்களின் தீர்மானம் வலுவாக உள்ளது.

நீதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அர்ப்பணிப்புடனும், சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தின் போது அவசியம் மற்றும் வளர்ச்சி இலக்குகளை சந்திக்க உலகளாவிய நம்பிக்கையை மீண்டும் பெறவும் எதிர்பார்த்துள்ளோம்." என தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் 2023.6. 7 ஆம் திகதி கோப் குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டிருந்தார்.

அத்தோடு, இதற்கு முன்னர் கோப் குழுவின் தலைவராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பேருந்து மோதியதில் மாணவி காயம்

யாழ்ப்பாணம் - வேம்படிச்சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் காயமடைந்துள்ளார்.

மாணவி, துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்குச் சென்ற வேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த மாணவி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-7)

# இளம் குடும்பப் பெண் மூதூரில் படுகொலை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பப்பெண் ஒருவர் அவரது கணவரால் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

உயிரிழந்தவர் அல்லே நகர் தோபூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், மூதூரில் வீடொன்றில் நேற்று முன்தினம் காலை பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

அதனைதொடர்ந்து விசாரணையை ஆரம்பித்த பொலிஸாருக்கு குடும்பத் தகராறு காரணமாக உயிரிழந்த பெண்ணின் கணவரே கொலை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# மண்டைதீவு முத்துமாரிக்கு பஞ்சதள இராஜ கோபுரம்

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பஞ்சதள இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.34 மணி தொடக்கம் முற்பகல் 11.04 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

இராஜ கோபுரத்திற்கான அடிக்கல்லை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் நாட்டிவைக்க, பூர்வாங்கக் கிரியைகளை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.பாலஸ்கந்தருபக் குருக்கள் நடத்தவுள்ளார்.

பஞ்சதள இராஜகோபுரம், மணிக் கோபுரங்கள், மணி மண்டபம் ஆகியவற்றை மண்டைதீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விநாயகரத்தினம் அவர்களின் குடும்பத்தினர் முழுமையான உபயமாக நிர்மாணித்து வழங்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன், திருமதி சங்கமித்திரா இரவிச்சந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)


## பதவி வெற்றிடம்

**Accounts Viva (pvt) Ltd** (யாழ். நகர்)

பகுதிநேர / முழுநேர கணக்கு பயிலுனர்கள்

( A/L வணிகப்பிரிவு அல்லது AAT அல்லது பல்கலைக்கழக மாணவர்கள் )

முகாமையாளர் (ஓய்வுபெற்றவர்களும்)

**070 694 4543**

(18857)

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு

செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம்.

மிகக்குறைந்த தொகையாக ரூபாய் 11999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கி கொள்ளுங்கள். உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.

*மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்*

**077 434 6245**

*விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே*

(18950)




# 232 வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

நாடளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட நிகர எடை காட்சிப்படுத்தப்படாத 232 வெதுப்பகங்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த வெதுப்பகங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

# நிகழ்நிலை...

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் சில பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துடன் இணங்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

இந்த குறைபாடுகள் தொடர்பில் தாம் மிகுந்த கவலையடைவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் L.T.B. தெஹிதெனியவின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள இந்த கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சட்டமா அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் 30-ற்கும் மேற்பட்ட பிரிவுகள் அரசியலமைப்புடன் இணங்கவில்லையென உயர் நீதிமன்றம் அடையாளப்படுத்தியிருந்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு தெரியப்படுத்தியுள்ளது.

உரிய திருத்தங்களுக்கமைய, சட்டமூலத்தை நிறைவேற்ற நீதிமன்றம் அனுமதி வழங்கிய போதிலும், அந்தத் திருத்தங்கள் முழுமையாக அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதை காணமுடியவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் ஐந்து விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் உள்ளடக்கப்படாமல் அரசியலமைப்பிற்கு முரணான வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமையின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்குள்ள வாய்ப்புகள் தொடர்பில் கவலைக்குரிய நிலை தோன்றியுள்ளதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பிற்கு முரணாக உள்ளமையினால், மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய தேவை காணப்பட்ட போதிலும் சாதாரண பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றிக்கொண்டமையை சாதாரண நிலைமையாக கருத முடியாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் முழுமையாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு இணங்க முன்வைக்கப்பட வேண்டுமென்பதுடன், அதனூடாக இலங்கை பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஜனாதிபதி அநுரகுமார இந்தியா உளவுத் தகவல்

(கொழும்பு)


**இலங்கையின் அடுத்த ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க என்று இந்தியாவின் உளவுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "எங்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார இந்தியாவுக்கு வெறுமனே செல்லவில்லை. இந்திய அரசாங்கம் இராஜ தந்திர ரீதியில் உத்தியோக பூர்வ அழைப்பு விடுத்த காரணத்தினாலேயே அவர் அங்கு சென்றுள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி அநுரகுமார என்று இந்திய உளவுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ளதன் காரணமாகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அடுத்த அரசாங்கம் எமது தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டி தலைமையிலான அரசாங்கமாகத்தான் இருக்கும்" என அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (நி-5-6)



## புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்த ரணில்

(கொழும்பு)

7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியாவின் பேர்த் நகருக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களை பேர்த்தில் சந்தித்தார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் பொருளாதார நவீனமயமாக்கல் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி அவர்களுக்கு விளக்கமளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கால நிலை மாற்றம், சுற்றுலா மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளில் அரசாங்கத்திற்கு உதவ விரும்புவதாக சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கையர்கள் தெரிவித்தனர். (நி-5-6)

## அரசாங்கத்தின் வருமானம் 25 வீதத்தினால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 25 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக இவ்வாறு வருமானம் அதிகரித்துள்ளது.

219 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 274 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வருமானம் மேலும், சுங்கத் திணைக்களத்தின் வருமானம் 11 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் மதுவரித் திணைக்களத்தின் வருமானமும் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் 114 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. எனவே அரசாங்க வருமான அதிகரிப்பானது நாட்டு பிரஜைகளின் நலனை மேம்படுத்தும் என அமைச்சர் சியம்பலாபிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி-5-6)

## மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படும் அபாயம்

### இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க மின் நிலையை திட்டங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தப்படா விட்டால், இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வங்குரோத்து நிலைமைகளுக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மின்சார சபையின் அதிகாரிகள் பாராளுமன்ற விசேட குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு உரையாற்றிய மின்சார சபையின் பொது முகாமையாளர் நரேந்திர சில்வா, அரசாங்கங்கள் எடுக்கும் சில முடிவுகள் மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களுக்கமைய மின் உற்பத்தி நிலையங்கள் இயங்காததன் விளைவுகளை மக்கள் தற்போது அனுபவிக்க வேண்டியுள்ளது.

செயலிலுள்ள ஆற்றலின் சிறப்பு பயன்பாடுகள் ஊடாக எதிர்கால உற்பத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## பொதுப்போக்குவரத்தில் பெண்களிடம் தகாத முறையில் நடந்தால் 5 வருட சிறை

### பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்தில் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வோருக்கு 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ எச்சரித்துள்ளார்.



பெண்களுக்கு பாலியல் ரீதியான தொல்லைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு குற்றவியல் சட்டத்தின் 345 ஆம் பிரிவுக்கு அமைய 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொது போக்குவரத்துகளில் சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர அண்மையில் அறிவித்திருந்தார்.

அதன்படி, பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்பவர்களுக்கு எதிராக இந்த விசேட நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும் பெண்களுக்கு பொது போக்குவரத்துகளில் இடையூறு ஏற்படுத்துவோர் தொடர்பில் அறிவிப்பதற்கு 109 எனும் அவசர இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தேர்தலை இலக்காகக் கொண்டு துரிதப்படுத்தும் அபிவிருத்திகள்

### பவ்ரல் சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை மையமாக வைத்து இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்திற்குள் அரசாங்கம் நிச்சயமாக ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பை வெளியிடும் என தெரிவித்துள்ள பவ்ரல் ஜனாதிபதி தேர்தலை மையமாக வைத்து அரசாங்கம் அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துகின்றது என குற்றம்சாட்டியுள்ளது.

மக்களிற்கு தற்போது அவசியமாக உள்ள மாகாண சபை தேர்தல்களை விட தான் வெல்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக கருதும் தேர்தலிற்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்குகின்றது என பவ்ரலின் தலைவர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்

மக்களின் ஜனநாயகத்திற்கான தளங்கள் நீக்கப்பட்டால் அந்த உரிமைகளை பெறுவதற்காக மக்கள் வேறுவழிகளை நாடுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிற்கான நடவடிக்கைகள் ஜூலை மாதம் ஆரம்பமாக வேண்டும். ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்களை நடத்துவது குறித்து தேர்தல் ஆணையகம் தீர்மானிக்க வேண்டும். ஜூலையின் முதல் வாரத்தில் இதற்கான அறிவிப்புகள் வெளியாக வேண்டும் எனவும் பவ்ரல் தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தூர் அணியை வீழ்த்தி வல்வெட்டித்துறை அடுத்த சுற்றுக்கு தகுதி



கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட தொடரில் வல்வெட்டித் துறை ஆதிசக்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

வடமராட்சி லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற போட்டியில் வல்வெட்டித் துறை ஆதிசக்தி அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதியது. ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆதிசக்தி அணி 05:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஆதிசக்தி அணியின் முன்கள வீரன் அஜய் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-90)



போட்டியின் ஆட்டநாயகன்



# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வடமராட்சி லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து அல்வாய் கலைமகள் அணி மோதவுள்ளது. (நி-5-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3037

**மாதுரி**

கூடவே இருக்கானுங்க..
திடீரன்னு லவ் பெயிலியர்ன்னு சொல்றானுங்க..




எந்த Gap'ல லவ் பண்றானுங்கன்னே தெரிய மாட்டுது...

**வைசாலினி**



பொண்ணு விலேஜ் ஸ்ரயில்ல சமையல் பண்ணுவா ன்னு தரகர் சொன்னா மாப்ள ஆனா..இப்படி எதிர்பாக்கல...

**தனுஸா**

CLASSல ரொம்ப தூக்க வர்ற நேரத்துல இப்படிதான் பெஞ்ச்ல படுத்துக்கிட்டு விரல்ல கொட்டு அடிப்போம்



டன் டன் டன் டப்புக்கு டப்புக்கு.. டன் டன் டப்புக்கு டப்புக்கு...இந்த சத்தம் ரொம்ப நல்லா இருக்கும்

**சாத்விகன்**

சிரித்துக்கொண்டே கடந்து விடு...



உன் கஷ்டங்களை மட்டுமல்ல கஷ்டத்திற்கு காரணமானவர்களையும்..!

**மோகிதன்**

எழுதுங்கள் என் கல்லறையில்... என்னான்னு...?



அட எதையாவது எழுதுங்கப்பா... நான் என்ன வந்து பார்க்கவா போறேன்..

**கைலேஷ்**

சார், நாளைல இருந்து தினமும் சாயந்திரம் 6 மணிக்கு நான் வீட்டுக்கு கிளம்பிடுவேன்.

மேனேஜர் - ஏன், என்ன நடந்தது?

சார், என்னோட சம்பளம் எனக்கு போதுமானதா இல்லை. அதனால என் குடும்பத்துக்காக, நைட் ஆட்டோரிக்ஷா ஓட்டலாம்னு இருக்கேன்.

சரி. அப்படியே செய். ஆனால், நைட் பசி எடுத்தா அண்ணாநகர் கிராசிங்கிற்கு வந்திரு.

ஏன் சார்?

நான் அங்கே இட்லி தோசை விற்கிறேன்ப்பா.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் நெல் காயவிடும்போது ஒழுங்கு விதிகளை கடைப்பிடியுங்கள்

## வைத்திய கலாநிதி அகிலேந்திரன்

(நெளுக்குளம்)

வீதி விபத்துக்களை குறைக்க முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரனால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கு பல காரணிகள் உண்டு. அதில் பிரதான வீதிகளில் நெல் உலர்த்துவது அல்லது காயப் போடுவதும் அடங்கும்.

இதற்காக பிரதான வீதிகளின் அரைவாசியை விட அதிக பகுதியை பயன்படுத்துகின்றார்கள். சட்ட ரீதியாக இதற்கு அனுமதி இல்லை. எனினும் விவசாயிகளின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அதிகாரிகளும் பொறுப்பானவர்களும் இதை கண்டு கொள்வதில்லை.

வீதி பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காக வீதிகளில் நெல் காயப்போடுவதற்கு சில கட்டுப்பாடுகள் அல்லது ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

வீதியின் நடுப் பகுதியிலிருந்து இரண்டு அடி குறைவாக நெல்லை காயவிடுதல், மருத்துவமனைகள், சன நெருக்கமான பகுதிகளை தவிர்த்தல் ஒடுக்கமான வீதிகள், வளைவுகள், பாலம் போன்ற இடங்களை தவிர்த்தல், தொடக்கத்திலும் முடிவிலும் ஒளிரக்கூடிய அல்லது கண்ணுக்கு தெளிவாக புலப்படக்கூடிய அடையாளம் வைத்தல், வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தால் அவற்றின் முன் பின் பகுதிகளில் ஒளிப் பிரதிபலிப்பு அடையாளம் பேணப்படுதல் போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இக் கடிதத்தின் பிரதிகள் முல்லை மாவட்ட பிரதேச செயலாளர், பொலிஸ் துறை, விவசாய திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து திணைக்களம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)

# உயர்தரப் பரீட்சை டிசெம்பரில் கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

உயர்தர விடைத்தாள்கள் திருத்தம், குறித்த நேரத்தில் பூர்த்தி செய்ய முடிந்தால் 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த முடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உயர்தர விடைத்தாள்களை திருத்தும் பணியில் ஈடுபடுவோருக்கு கடந்த வருடம் போன்று இந்த வருடமும் உரிய கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எனவே தற்போது விடைத்தாள்கள் திருத்தல் முறையாக நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6)





நெதர்லாந்து நாட்டின் உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயம் செய்து பார்வையிட்டனர்.

நெதர்லாந்து நாட்டின் பதில் தூதுவர் ஜவன்ரூட் ஜென்ஸ் மற்றும் நெதர்லாந்து நாட்டின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சின் கொள்கை அதிகாரி ப்ராங் டீ வைல்ட் ஆகியோர் தலைமையிலான குழுவினரே நூலகத்திற்கு சென்றனர். (படங்கள்:- சிவசாந்தன்)

# மன்னாரில் திறக்கப்பட்ட மகப்பேற்று சிகிச்சை பிரிவு



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சுமார் 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட மகப் பேற்று சிகிச்சை பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் நிதி உதவியுடன் சுமார் 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப் பட்ட மகப்பேற்று சிகிச்சை பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட பொது வைத்திய சாலையின் பணிப்பாளர் ஏ.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். (நி-5-6-285)

# இராசிபலன்

10.02.2024
தை 27, சனிக்கிழமை
பிரதமை பின்னிரவு 3.37 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.58 மணிவரை

சுபநேரம் -3.34-5.04 மணிவரை
இராகுகாலம்-9.34-11.04 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர் பூசம்.

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், எதிர்பாராத வகையில் முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**சிம்மம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், குடும்பத்தில் உறவினர் செல்வாக்கு மேலோங்கும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடங்குவீர்கள்.

**தனுசு** குடும்பத்தார் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** தூரதேசத்தில் இருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்துசேரலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

தவறான பதிலைக் காட்டிலும் மௌனம் சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளத்தை அழிக்காதே!

## அம்பனில் கவனயீர்ப்பு போராட்டம்

(கரணவாய்)

**மண் அகழ்வை நிறுத்தக்கோரி அம்பனில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



மருதங்கேணிப் பிரதேச செயலகத்தினால் அனுமதி வழங்கப்பட்டு குறித்த பகுதியில் மண் வளம் சூறையாடப்பட்டு வருவதாகவும் இந்த செயற்பாட்டின் மூலம் இயற்கை வளம் அழிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


முன்னதாக அம்பன் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக வீதியை மறித்து ஆரம்பித்த போராட்டம் வீதிவழியாக நடந்து செல்லும்போது இந்த மண் எங்களின் சொந்த மண், போதும் போதும் கொள்ளையடித்தது போதும், அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே, வேண்டாம் வேண்டாம் மண் அகழ்வு வேண்டாம், நிறுத்து நிறுத்து மண் அகழ்வை நிறுத்து போன்ற கோசங்களை ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டவர்கள் எழுப்பியிருந்தனர்.

இவ்ஆர்ப்பாட்ட பேரணியில் அம்பன் பகுதி மக்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சியினரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-60)

## மாநகர சபை ஆணையாளராக கிருஸ்னேந்திரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக நேற்று ச.கிருஸ்னேந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.



இதுவரை காலமும் யாழ். மாநகர சபை ஆணையாளராக பணியாற்றிய இ.த.ஜெயசீலன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக இருந்த ச.கிருஸ்னேந்திரன் மாநகர சபையின் ஆணையாளராக பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## மாவட்ட செயலரை சந்தித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்.மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரனை மரியாதை நிமித்தமாக நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், போதைப் பொருள் பாவனை, சட்டம் ஒழுங்கு என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் கலந்து கொண்டிருந்தார். (நி-5-6-33)

## சுன்னாகம் ப.நோ.கூ.சங்க கிளைக்குழு தெரிவு இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழு தெரிவுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அக்கிளைகளுக்கான கிளைக்குழு பொதுச்சபை உறுப்பினர்களுக்கு தவிசாளரினால் தனித்தனியாக தபால் மூலம் நிகழ்ச்சி நிரல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே அக்கிளைகளில் வாக்களிக்க தகுதியுள்ள சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி சங்க கிளைக்குழு தெரிவுக் கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## கௌரவிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெரியமாவடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு "கற்கைக் கௌரவிப்பு நிகழ்வு" நிலையத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறவுள்ளது.


கௌரவிப்பு நிக்ழ்வைத் தொடர்ந்து இசையமுதம் நிகழ்வு, செம்முகம் ஆற்றுகைக் குழுவின் நாடகம், தனியாள் அரங்க நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

## விபத்துக் காயங்களால் 76 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2023ஆம் ஆண்டு, விபத்துக்கு உள்ளாகி சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில், அனுமதிக்கப்பட்டவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விபத்துக்களில் சிக்கிய நிலையில் ஆயிரத்து 559 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என தெரிவித்தார். (நி-5-6-33)



யாழ்.பல்கலைக் கழகத்தின் பொறியியல் துறையைச் சேர்ந்த முகமது ஜவுசி பாத்திமா ஆஷிஃபா மற்றும் ராதாகிருஷ்ணன் யெசிந்தன் ஆகிய இரு மாணவர்கள் புகழ்பெற்ற இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (IIT Madras) ஆறு மாத கால ஆராய்ச்சிப் பயிற்சித் திட்டத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 1200 | 1000 | 1200 | 980 |
| தக்காளி | 750 | 700 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 160 | 130 |
| கோவா | 500 | 450 | 600 | 650 |
| கரட் | 850 | 900 | 1000 | 1100 |
| பூசணி | 250 | 240 | 300 | 270 |
| புடோல் | 200 | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | 270 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 320 | 350 | 400 | 300 |
| பாகற்காய் | 800 | 400 | 600 | 520 |
| வெண்டக்காய் | 600 | 500 | 600 | 435 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 200 | 100 |
| பயற்றங்காய் | 550 | 550 | 500 | 660 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 600 |
| பீற்றூட் | 450 | 300 | 350 | 400 |
| கறிமிளகாய் | 600 | 900 | 1200 | 700 |
| முருங்கைக்காய் | 1500 | 3000 | 1600 | 2000 |
| போஞ்சி | 400 | 400 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 70-100 |
| தேசிக்காய் | 100 | 200 | 200 | 190 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70-110 | 80-100 |
| இராசவள்ளி | 450 | 400 | 600 | 450 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 350 | 250 |
| முள்ளங்கி | 150 | 150 | 300 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 | 110 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் தூதுவரை சந்தித்தார் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(கொழும்பு)



இலங்கைக்கான ஜேர்மன் தூதரகத்தின் அழைப்பின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ் நியூமனை அண்மையில் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலை வராகத் தெரிவுசெய்யப்பட்ட சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவுக்கும் நோக்கில் ஜேர்மன் தூதரகத்தால் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. (நி-5-6)

# முழுமையடையாத நிலையில் பல வீடுகள்- பயனாளிகள் கவலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் இடம்பெற்று 14 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளை முழுமையாக கட்டி முடிப்பதில் பல குடும்பங்கள் தொடர்ச்சியாக நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டில் இருந்து மீள் குடியேறிய குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை உதவி அமைப்புகள் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வந்தன. ரூபா. 550,000 பெறுமதியில் நிரந்தர வீடுகள் முதலில் வழங்கப்பட்டன.

தற்போதும் நிரந்தர வீடுகள் அரை குறையாகவே காணப்படுகின்றன. நாட்டில் கட்டடப் பொருட்கள் விலை உயர்ந்து காணப்படுவதன் காரணமாக தமது வீடுகளை முழுமையாக அமைக்க முடியவில்லை என பயனாளிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6-350)

# ஜோர்தானில் இருந்து திரும்பிய 66 இலங்கையர்கள்

(கொழும்பு)

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் சிரமத்திற்குள்ளான 66 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஜோர்தானில் இத்தொழிற் சாலைகளை நடத்தி வந்த இந்திய முதலீட்டாளர்கள் அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு தெரிவிக்காமல் தொழிற்சாலைகளை மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் அந்த தொழிற்சாலைகளில் பணியாற்றிய இலங்கையர்கள் குழுவொன்று தமக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொண்டு நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தாயகம் திரும்பியிருந்தனர்.

இந்த ஜோர்தானிய தொழிற்சாலையில் பணிபுரிந்த மற்றுமொரு இலங்கையர் குழு எதிர்வரும் இரண்டு நாட்களில் இலங்கை அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)


## அறிவித்தல்
## பகிரங்க மூடிய கூறுவிலை

- வடமராட்சி கிழக்கு.ப.நோ.கூ சங்கத்திற்கு சொந்தமான LH-9811 இலக்கமுடைய TATA வகை லொறி ஒன்று மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.
- மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விற்கப்படும் வாகனத்திற்கான விண்ணப்ப படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/- (ஐந்நூறு) செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும் இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட விண்ணப்ப படிவத்தின் விண்ணப்பம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்கூறிய வாகனத்தினை மருதங்கேணி தெற்கு தாளையடியில் இருக்கும் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
- பார்வையிடும் நேரம் 10.02.2024 ஆம் திகதி தொடக்கம் 24.02.2024 ஆம் திகதி வரையும் விடுமுறை நாள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம் மருதங்கேணி தெற்கு எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி. விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- இவ் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 10.02.2024 ஆம் திகதி தொடக்கம் 24.02.2024 ஆம் திகதி நண்பகல் 12:00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 24.02.2024 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- கூறுவிலையின்படி லொறியினை பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி லொறியினை கொண்டு செல்லுதல் வேண்டும்.
- ஆரம்ப விலை:- லொறி :- ரூபா 4000000.00 (நாற்பது இலட்சம்).

(சி-8315)

தலைவர்,
வடமராட்சிகிழக்கு ப.நோ.கூ.சங்கம்.

தொலைபேசி இலக்கம்
-021 226 0504



## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 01, முருகமூர்த்தி வீதி, 45/33A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த குமாரலிங்கம் கைம்பெண் கமலாதேவி அவர்கள் 05.10.2011 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1146ஆம் இலக்கத்தில் நன்கொடை உறுதி மூலம் அவரது மகனான அதே இடத்தைச் சேர்ந்த குமாரலிங்கம் ரவிச்சந்திரனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த குமாரலிங்கம் ரவிச்சந்திரன் 15.11.2011ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு K.M.இராதாக்கிருஷ்ணன் முகதாவில் 755 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அவ்வூரைச் சேர்ந்த கனகராசா சுதர்சனுக்கு வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த கனகராசா சுதர்சன் 01.04.2012ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1337 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-735. ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவுக்கும் வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் ஏழாலை மேற்கு ஏழாலையைச் சேர்ந்த கனகராசா சுதர்சன் 1 ஆம் பகுதியாகவும் இல -735. ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 2 ஆம் பகுதியாகவும் 11.04.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1346ஆம் இலக்கத்தில் திருத்தல் உறுதியொன்று வரைந்துள்ளனர்.

குறித்த ஆதனம் இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 18.07.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு K.M.இராதாக் கிருஷ்ணன் முகதாவில் 891 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-198, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகைக்கும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 1 ஆம் பகுதியாகவும், இல-198, பொன்னப்பா ஒழுங்கை. வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகையும் 2 ஆம் பகுதியாகவும் 06.11.2013 திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1911 ஆம் இலக்கத்தில்திருத்தல் உறுதியொன்று வரைந்துள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயில்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை, இது நல்லூர் பிரதேச செயலகப்பகுதியில் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/99 கிராம சேவகர் பிரிவிலுள்ள "புங்கடி" நெற்.பர. 30 குளி 6.16. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தினால் 2011.10.28ஆம் திகதி 1620ஏ இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் Lot 1 என காட்டப்பட்டுள்ளது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தி னால் 2011.10.28 ஆம் திகதி 1620ஏ இலக்கத்தில் அளந்த நிள அளவைப்படத்தில் 1 -16 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது இதில் 1 - 8 வரையான பாகங்கள் நெற்.பர 14 குளி 0.95. இதில் Lot 4 என்ற பாகம் நெற்.பர இரண்டு(நெ.ப 02) எல்லைகள்.

| | |
|---|---|
| கிழக்கு | :-பொன்னுத்துரை சரோஜாதேவியின் ஆதனம் |
| வடக்கு | :-12 அடி அகலம் கொண்ட பாதை |
| மேற்கு | :- மிகுதி ஆதனம் |
| தெற்கு | :-12 அடி அகலம் கொண்ட பாதை இதனடங்கலும். |

தற்போது சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகையும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை இராமநாதன் உம் பெண் கனகாம்பிகை உம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சி-8312)

ஆணையாளர், யாழ்.மாநகர சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# உக்ரைனுக்கு 2029 வரை நீடிக்கப்பட்ட வரிச்சலுகை

### பிரிட்டன் வர்த்தக அமைச்சு



(லண்டன்)

உக்ரைனுடன் அனைத்து பொருட்களுக்கும் சுங்க வரி இல்லாத வர்த்தகத்தை 2029 வரை நீடிப்பதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்யாவுடனான போர் தொடங்கிய பின்னர் உக்ரைனுடனான அனைத்து வணிகங்களுக்கும் பிரிட்டன் வரிகளை நீக்கியது. இந்த ஏற்பாடு 2024 மார்ச் வரை நீடிக்கும் என்று முன்னதாக உடன்பாடானது.

முட்டை, கோழி தவிர்ந்த அனைத்து பொருட்களுக்கும் சுங்கவரி இல்லாத வணிகம் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்படும் என்று பிரிட்டனின் வாணிபம், வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கான ஏற்றுமதிக்கான வரிகளை நீக்குவதன் மூலம் பிரிட்டிஷ் நிறுவனங்களும் பயனடையும்.

இதேவேளை, உக்ரைனுக்கு ஆயுதங்களும் வழங்கி வருவதுடன், புதிய மின்னிலக்க வர்த்தக உடன்பாடு உட்பட சாதகமான வர்த்தக விதிமுறைகள் மூலம் உக்ரைனை பிரிட்டன் ஆதரித்தும் வருகிறது. (நி-5-6)

# சீண்டினால் சுக்கு

# மிரட்டல் விடுத்

(பியாங்யாங்)


ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுப

கொரியாவை வடகொரியா அழித்து நிர்மூல

என்று கிம் ஜாங் உன் மிரட்டல் விடுத்துள்ளார்



# ஹவுதி அமைப்பினர் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்



(வோஷிங்டன்)

ஏமனில் உள்ள ஹவுதி போராளிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா மீண்டும் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதன்படி பாதுகாப்பு நடவடிக்கையாக ஹவுதி போராளிகளுக்குச் சொந்தமான மாலுமிகள் இல்லாத நான்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த தயாராக வைக்கப்பட்டிருந்த 7 ஏவுகணைகளை தாக்கி அழித்ததாகவும் அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

அதேவேளை செங்கடலில் பயணிக்கும் சர்வதேச வர்த்தகக் கப்பல்கள் மீது ஹவுதி போராளிகளின் தாக்குதல்களால் சர்வதேச வர்த்தகக் கப்பல் போக்குவரத்து பாதிப்படைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இராணுவ உதவிகளை

# மேற்குலக நாடுகள

### உக்ரைன் ஜனாதிபதி

(கீவ்)

உடனடியாக இராணுவ உதவிகளை அனுப்பிவைக்குமாறு உக்ரைன், மேற்குலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பீரங்கிக் குண்டுகள் தேவைப்படுவதாகவும் அவற்றை சீக்கிரம் அனுப்பி வைக்குமாறும் உக்ரைன் கோரியுள்ளது.

ரஷ்யா அண்மையில் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அதற்கு பதில் தாக்குதல்களை நடத்த பீரங்கி குண்டுகள் அவசரமாக தேவைப்படுவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்ய நடத்தும் ஒவ்வொரு ஏவுகணை தாக்குதலுக்கும் பதில் தாக்குதல் நடத்தப்படும் என உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...தநூறாக்குவோம்!

# ...த வடகொரியா

...ப்பட்டால் தென் ...மூலமாக்கிவிடும் ...ளார்.



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், அணு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு, ஆயுத பலத்தை அதிகரித்து உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறார்.

அதற்கு பதில் நடவடிக்கையாக அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்த ராணுவ பயிற்சிகளை தீவிரப்படுத்துவதால் கடந்த சில மாதங்களாகவே கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவி வருகின்றது.

அதேவேளை, தென்கொரியாவுடனான அனைத்து பொருளாதார ஒத்துழைப்பையும் முறித்துக்கொள்வதாக வடகொரியா அறிவித்துள்ளது.

மேலும், சமீபத்தில் இராணுவ வீரர்களிடையே கிம் ஜாங் உன் பேசும்போது, போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்துள்ளதால் போர் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சென்று பணிகளை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, தென்கொரியாவுடன் தூதரக உறவை தொடரவோ பேச்சுவார்த்தை நடத்தவோ விருப்பம் இல்லை.

தொடர்ந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென்கொரியாவை வட கொரியா அழித்து நிர்மூல மாக்கிவிடும்.

தென்கொரியாவுடனான உறவுகளைத் துண்டிப்பது தொடர்பான சமீபத்திய நகர்வுகள், இராணுவம் தனது அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்த அனுமதிப்பதாகவும் வடகொரிய ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-5-6)

# இஸ்ரேல்-ஹமாஸ் போரால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

(காசா)

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், இஸ்ரேலானது தரைவழித் தாக்குதலை ரஃபா நகரில் நடத்தப் போவதாக அறிவித்ததிலிருந்து, காசா மீதான குண்டு வீச்சுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே காணப்படுகின்றது.

மத்திய காசாவில், குடியிருப்பு பகுதியில் குண்டு வெடித்ததில் ஏராளமானோர் கொல்லப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் வெளியாகாத நிலையில் தான், தெற்கு கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனையைச் சுற்றி, இஸ்ரேலிய படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஸ்னைப்பர் தாக்குதல்களில் 21 பாலஸ்தீனிய பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படும் தரை மற்றும் வான் வழித் தாக்குதல்களினால் இதுவரையில் காசாவில் 27,947 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஐஸ்லாந்தில் வெடித்து சிதறிய எரிமலை

(ரெய்க்யவிக்)

ஐஸ்லாந்தில் பாரிய சத்தத்துடன் எரிமலை வெடித்து சிதறியுள்ளது.

ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்தில் 30 இற்கும் மேற்பட்ட செயற்படும் எரிமலைகள் அமைந்துள்ளன.

அதில் கிரின்டாவிக் நகரில் உள்ள எரிமலை நேற்று முன்தினம் திடீரென பயங்கர சத்தத்துடன் அப்போது அந்த எரிமலையில் இருந்து விண்ணை முட்டும் அளவுக்கு தீப்பிழம்புகள் வெளியேறின.

இது சுமார் 3 கிலோமீற்றர் தூரத்துக்கு நெருப்பு குழம்புகளாக ஓடியது. இதற்கிடையே அந்த பகுதியில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். (நி-5-6)

# ...ள அனுப்பி வைக்குமாறு ...ளிடம் கோரிக்கை



நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவது மாத்திரமல்ல, ரஷ்யாவுக்கு கூடுதலான இழப்பை ஏற்படுத்துவதே உக்ரைனின் இலக்கு எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# புதிய காலநிலை செயற்கைக்கோளை விண்ணில் செலுத்திய நாசா


(வோஷிங்டன்)

நாசா 'பேஸ்' என்ற புதிய காலநிலை செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.

உலகின் பெருங்கடல்கள் மற்றும் வளிமண்டலத்தை இதுவரை இல்லாத வகையில் விரிவாக ஆய்வு செய்வதற்காக இந்த செயற்கை கோள் நேற்று முன்தினம் விண்ணில் அனுப்பப்பட்டுள்ளது.

கேப் கனவெரலில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் ரொக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்த செயற்கைக்கோள் சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இது பூமியில் இருந்து 420 மைல்கள் உயரத்தில் பறந்தபடி கடற்பகுதி மற்றும் வளிமண்டலத்தை சுமார் 3 ஆண்டுகள் ஆய்வு செய்யும். இதில் 3 அறிவியல் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.



இரண்டு கருவிகள் மூலம் தினமும் பூமி துல்லியமாக படம்பிடிக்கப்படும். மூன்றாவது கருவி மூலம் மாதாந்திர அளவீடுகள் எடுக்கப்படும்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பூமியை இந்த செயற்கைக்கோள் தெளிவாக காட்டும் என திட்ட விஞ்ஞானி ஜெர்மி வெர்டெல் தெரிவித்தார்.

சூறாவளி மற்றும் வானிலை முன்னறிவிப்புகளை துல்லியமாக தெரிவிக்கவும் வெப்ப நிலை அதிகரிக்கும்போது பூமியின் மாற்றங்களை விபரிக்கவும் தீங்கு விளைவிக்கும் பாசிகள் எப்போது பூக்கும் என்பதை கணிக்கவும் இந்த செயற்கைக்கோள் மூலம் கிடைக்கும் தரவுகள் உதவும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்களுக்கான கட்டுப்பாடுகளில் மேலும் தளர்வு -மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன.

பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயக்கொள்கை சபை நேற்று முன்தினம் கூடிய போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால், கடந்த வருடம் ஜனவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன் களை வழங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கட்டுப்பாடுகளை தளர்த்தியதன் மூலம், சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வேகம் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5-6)

# அஸ்வெசும-புதிய விண்ணப்பங்கள் இன்று முதல் கோரப்பட்டுள்ளன



(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் புதிய பயனாளர்களை இணைத்துக் கொள்வதற்கான புதிய விண்ணப்பங்களை கோரும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் புதிய பயனாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

400,000 புதிய அஸ்வெசும பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

பயனாளிகளை தெரிவு செய்யும் போது பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் சில நிபந்தனைகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சுச் தெரிவித்துள்ளது.

முன்னதாக, குடும்பங்களைத் தேர்ந்தெடுக்க பயன்படுத்திய விதிகளில் யாராவது இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியவில்லை என்றால் அவர்களும் இதன் மூலம் விண்ணப்பிக்கலாம். (நி-5-6)

# நெல் கொள்வனவிற்கு விலை நிர்ணயம்

(கொழும்பு)

பெரும்போக நெற்செய்கையின் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சு விலை நிர்ணயம் செய்துள்ளது.

இதன்படி, 14 சதவீதம் வெப்பதன்மையை கொண்ட ஒரு கிலோகிராம் நாடு அரிசியை 105 ரூபாவிற்கும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை 120 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் கீரிச் சம்பாவை 130 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், வெப்பத்தன்மை 14 சதவீதத்தை விட அதிகமாக காணப்படும் ஒரு கிலோகிராம் நாடு அரிசியை 90 ரூபாவிற்கும் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசியை 100ரூபாவிற்கும் ஒரு கிலோகிராம் கீரிச்சம்பா அரிசியை 120 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சிறு, மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாவும் அரிசி சேகரிப்பாளர்களுக்கு 25 மில்லியன் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (நி-5-6)

# அவுஸ்.வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



(கன்பெரா)

அவுஸ் திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனி வோங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சார்பில், இலங்கை ஜனாதிபதியை மரியாதை யுடன் வரவேற்ற அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், இந்த மாநாட்டுக்கு இலங்கை வழங்கிய சிறப்பான ஆதரவையும் பாராட்டினார்.

இந்து சமுத்திரம் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

இந்து சமுத்திர வலய நாடுகள் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திரத்தை நோக்கி அதிகாரத் தளங்கள் மாறுவதன் மூலம், பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது ஒரு முக்கியமான படியாகும் என்று சுட்டிக்காட்டினார். (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 32



தென்கச்சி கோசுவாமிநாதன்

# பூட்டும் சாவியும்

ஒருத்தர் அவசரமாக பொலிஸ் ஸ்ரேசன் போய்க்கொண்டு இருந்தார்.என்ன சேர் விடயம் என்று எதிரில் வந்தவர் கேட்டார்.ஒரு திருட்டு நடந்துபோச்சுது சேர். அது தான் புகார் கொடுக்க போகிறேன் அவசரமாக என்றார்.அவசரமாகப் போகவேண்டும் என்றால் உங்கள் காரிலே போகலாமே என்றார் அவர்.

அது தானே முடியாது என்றார் இவர்.ஏன் என்று கேட்டார் அவர்.

திருட்டுப்போனதே என்னோட கார் தான் என்றார் இவர்!

இந்த கார் திருட்டு இங்க மட்டும் இல்லை வெளிநாடுகளிலயும் இப்போ ரொம்ப சகஜமாக நடக்குதாம்.

இதை தடுக்கிறதுக்கு என்ன வழி என்று யோசித்துப்பார்த்துக் கொண்டு அமெரிக்காவிலே எலக்ரோனிக் கார் சாவி ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். இந்த சாவி எப்படி என்றால் இதில உள்ள எலக்ரோனிக் சிஷ்டம் - ட்ரைவர் பிடித்திருக்கிற கார் சாவி இதோட இணைக்கப்பட்டிருக்கும்.

சாவியை ஓன் பண்ணின உடனேயே கூடுதல் அலை நீளம் உள்ள ரேடியோ சிக்னல்கள் டிரைவரின் கைப்பிடியோட இருக்கிற சிஸ்டத்துடன் மோதி டிரைவருக்கு சிக்னல் அனுப்புகிறது. இந்த சிக்னல் கிடைத்த உடனேயே டிரைவர் காரை ஓட்ட முடியாது. தகுந்த பதிலைக் கொடுத்தால் தான் டிரைவர் காரை ஓட்ட முடியும்.அப்போது தான் அதிலே உள்ள கம்யூட்டர் காரை ஓடுவதற்கு அனுமதியளிக்கும்.

கள்ளச் சாவி போடும் ஆசாமிகள் என்ன தான் தலைகீழாக நிண்டாலும் காரை கிளப்ப முடியாது.

இந்த எலக்ரோனிக் கார்-சாவி சிஸ்டத்திலே ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு அலை நீளம். அதனாலே காரைத் திருடுறவர்கள் சாவியை ஓன் செய்துவீட்டு சரியான பதிலை கொடுக்க முடியாது.அது மட்டும் இல்லை.

கள்ளச் சாவி போட்டா கார் பீப் பீப் என்று கத்த ஆரம்பித்து விடும் உடனே திருடன் அலரி அடித்து கொண்டு ஓட ஆரம்பித்துவிடுவான் இல்லை என்றால் மாட்டிக்கொள்வான்.

!பாருங்க ! இந்த இருபதாம் நூற்றாண்டு திருடனை எப்படி எல்லாம் சமாளிக்க வேண்டி இருக்கு என்று. லண்டனிலே எப்படி தெரியுமா? அங்கே ஒரு பாதுகாப்பு நிறுவனம் எலக்ரோனிக் பூட்டும் சாவியும் உருவாக்கி இருக்கு.

அந்த பூட்டு சாவிக்கு எலக்ரோ என்று பேராம்.

சாவி நுனியிலே ஒரு சிலிக்கான சில்லு இருக்கும். அதிலே கோடிக் கணக்கான நம்பரை பதித்து வைக்கலாம்.ஒரு மில்லியன் என்பது நூறு கோடி இது மாதிரி 70 ஆயிரம் மில்லியன் கோடி என்றால் எவ்வளவு? அவ்வளவு நம்பரை இதில் பதியமுடியம என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் .

இப்ப ஒரு குறிப்பிட்ட நம்பர் பதிந்திருக்கிற சாவியை பூட்டுக் குள்ளேயே நுழைக்கிறோம்.உடனே பூட்டிலே உள்ள பாட்டரி உதவி யாலே மின் காந்த மண்டலம் உருவாகும்.இப்போது சாவியிலே பதிந்து இருக்கிற எண்ணை பூட்டிலே இருக்கிற கம்யூட்டர் சில்லு படித்து புரிந்து இருக்கும். ஏற்கனவே எந்த நம்பர் உள்ள சாவி வந்தா கதவை திறக்கணும் என்று பூட்டிலே பதிவு செய்து இருக்கிறோமோ அந்தச் சாவிகளுக்கு மட்டும் பூட்டு திறக்கும். இல்லை என்றால் கதவை திறக்க முடியாது.


இதில் இருக்கிற வசதி என்ன என்றால் ஒரே பூட்டை ஒன்றுக்கு மேற்பட்ட சாவியை பயன்படுத்தி திறக்கலாம்.ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நம்பர் அதனாலே ஒரு சாவி தொலைந்து போனா அந்த சாவி நம்பரை மட்டும் பூட்டிலே அழிச்சிடலாம். அதனாலே தொலைந்து போன சாவி வேற யாரு கையில் கிடைத்தாலும் அதை பயன்படுத்தி இந்த பூட்டை திறக்க முடியாது.ஏற்கனவே காட்டுகள் மூலமாக பூட்டை திறக்கும் முறை இருக்கு. இந்த காட்டுகளிலே நம்பர் பதிவாகி இருக்கும். இந்த நம்பர் என்ன என்பதை சுலபமான படித்து தெரிந்து கொள்ள முடியும். இதில் ஒரு சிக்கல் என்னவென்றால் இதில் சாவியில் உள்ள சிலிக்கான் சில்லை உடைத்தால் தான் அதை தெரிந்து கொள்ள முடியும்.அதனாலே அதை விட இது பாதுகாப்பு.

என்ன செய்வது! காலம் கெட்டுப்போய்விட்டது!பூட்டு சாவியை கூட புத்திசாலித்தனமாக செய்ய வேண்டி இருக்கு எந்த நேரத்தில என்ன நடக்குமோ என யூகிக்க முடியவில்லை சார். ஒரு கணவனும் மனைவியும் வீட்டை பூட்டி விட்டு சினிமாவுக்கு போய் இருந்தாங்க ராத்திரி பத்து மணிக்கு மேலே திரும்பி வந்தாங்க.அந்த கணவன் சொன்னான் இதோ பாரு வீட்டு சாவியை தவறுதலாக தியேட்டரில தொலைத்து விட்டேன். அங்கே அதை உன் கிட்டே சொல்லவில்லை! இப்ப இங்க வந்த பிறகு தான் எனக்கு நிம்மதியாக இருக்கு.. என்றான். என்ன சொல்லுறீங்க என்றார் மனைவி.

சாவி தான் காணாம போச்சு என்று கவலைப்பட்டேன். இங்கே வந்து பார்த்தா பூட்டும் காணாமல் போயிருக்கு! அதனாலே நல்லதா போச்சு கதவை திறப்பதில் ஒன்றும் கஷ்டம் இல்லை என்றான் என்று சொன்னார் கணவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கணை ஆலய திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்



(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரபொங்கல் நிகழ்வு எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் குறித்த பொங்கல் உற்சவத்தின் போது மேற்கொள்ள வேண்டிய போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகள் உள்ளிட்ட பொங்கலின் போது மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்றது.

இம்முறையும் பாரம்பரிய முறைப்படி பண்டம் எடுக்கும் வைபவம் புத்தூர் சந்தி மீசாலையிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் பங்குனி மாதம் 17 ஆம் திகதி விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி அன்று பிற்பகல் பண்டவண்டில்கள் புத்தூர் சந்தி நோக்கி சென்று பொங்கல் அன்று 24.03. 2024 பண்ட வண்டில்கள் ஆலயத்தை வந்தடைந்து பாரம்பரியமாக மேற்கொள்ளும் பொங்கல் நிகழ்வு நடைபெறும்.

குறித்த கலந்துரையாடலில் கண்டாவளை பிரதேச செயலாளர், மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட இலங்கை போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து துறையினர், மின்சாரசபை உத்தியோகத்தர்கள் ,பொது சுகாதார பரிசோதகர்கள், பொங்கலுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

(நி-5-6-316)

# புதிய கல்வி செயற்றிட்டத்திற்கு வடக்கில் 2 பாடசாலைகள் தெரிவு

(குருமன்காடு)

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்னோடி திட்டத்திற்காக வடக்கு மாகாணத்தில் இருந்து வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுளஎன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 8-11 வரையான மாணவர்களுக்கு எண்ணிம குடியுரிமைத் திறன்கள் பாடம் ஐ.நாவின் இணை நிறுவனமான யுனிசெப்பின் நிதி அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக, இலங்கையின் ஒவ்வொரு மாகாணங்களிலும் இருந்து இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு முன்னோடி செயற்றிட்டமாக பாட அறிமுகத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 18 ஆசிரியர்களுக்கு ரிஓரி பயிற்சியானது தேசிய கல்வி நிறுவகத்தில் வழங்கப்பட்டது.

இதனை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. குறித்த செயற்றிட்டமானது இந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-250)

# 106 பேருக்கு காணிப்பத்திரம் யாழில் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால், யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 106 பயனாளிகளுக்கு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மேலதிகமாக 20 பயனாளிகளுக்கு வீடமைப்பு கடனுக்கான முதற்கட்ட காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, உப தலைவர் லக்ஷ்மன் குண வர்தன, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தேசிய வீட மைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன், தேசிய வீட மைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6)

# ஐயன்குள மருத்துவமனையின் அம்புலன்ஸ் மீண்டும் சேவையில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன் குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் சேவை மீண் டும் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் மருத்துவமனையில் பணியில் ஈடுபட்டுள்ளதாக கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

பல மாதங்களாக அம்புலன்ஸ் மருத்துவமனையில் இல்லாததன் காரணமாக ஐயன்கன் குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களின் மக்களை மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார பணிப்பாளர் எடுத்த முயற்சி காரணமாக ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரவு, பகலாக சேவையில் ஈடுபடும் வகையில் தற்போது அம்புலன்ஸ் பணியில் ஈடுபட்டுள்ளது. (நி-5-6-350)




# திருட்டுக்கள் அதிகரிப்பால் அச்சத்தில் மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் திருடர்களின் தொல்லை அதிகரித்து உள்ளது. வீதியில் செல்லும் பெண்களை இலக்கு வைத்து உந்துருளியில் வருபவர்கள் சங்கிலி அறுத்தல், தொலைபேசி மற்றும் கையில் கிடைக்கும் பொருட்களை எடுத்துச் செல்லல் போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

திருடர்களை கட்டுப்படுத்துவதற்கு அக்கராயன் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களினால் கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. (நி-5-6-350)

# யானைகள் அட்டகாசம் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிப்பு



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மந்துவில், மல்லிகைத்தீவு போன்ற கிராமங்களில் கடந்த இரண்டு , மூன்று தினங்களாக தொடர்ச்சியாக விவசாய காணி, வயல் காணி, தோட்ட[illegible]ளுக்குள் கூட்டமாக புகுந்த யானைகள் வாழ்வாதார பயிர்களான நெல், தென்னம்பிள்ளை, பயிற்றை, வெண்டி, கச்சான் என்பவற்றை மிதித்து நாசமாக்கியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் யானையின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதனால் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலை யேற்பட்டுள்ளது. யானை உள் நுழையாதவாறு யானை வேலியினை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-299-350)

# 'நீந்திக் கடந்த நெருப்பாறு' நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழ் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதியுள்ள 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு நாவல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான சிவஞானம் சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக மகாதேவா ஆச்சிரம நிலையத்தின் தலைவர் சி. மோகனபவன், இலங்கை குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் தலைவர் நா. வை. மகேந்திரராசா, கே எஸ் ஆர் மற்றும் பண்டிதர் பரந்தாமன் கலைக் கல்லூரி ஆகியவற்றின் இயக்குனர் கே. சௌந்தரராஜன் மற்றும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் அதிபர் சின்னப்பா நாகேந்திரராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி-5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 402





அவருடைய விருப்பத்தை அறியாமல் எதுவும் என்னால் செய்ய இயலாது.

பிக்கு குறுக்கிட்டுக் கூறினார்:- "இளவரசே! தங்கள் தந்தை சுந்தர சோழர் இன்று சுதந்திரமின்றிச் சிறையில் இருப்பதுபோல் இருப்பதை நீர் அறிவீரா?"

"ஆம் என் தந்தை நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் இருக்கிறார். கால்களின் சுவாதீனத்தை இழந்திருக்கிறார். ஆயினும் அவருடைய பெயரால், அவரிடம் அதிகாரம் பெற்று, சோழ நாட்டை ஆளுவோரின் கட்டளைக்கு நான் உட்பட்டவன். அவர்களுடைய கட்டளையின்றி நான் இந்தச் சிங்காதனத்தை ஏற்றுக் கொண்டால் தேசத்துரோகியும், ராஜத்துரோகியும் ஆவேன்"

"அவ்வாறு தாங்கள் கருதுவதாயிருந்தால் தஞ்சாவூருக்குத் தூது கோஷ்டி ஒன்று அனுப்பச் சித்தமாயிருக்கிறோம். தங்கள் தந்தையார் புத்த தர்மத்தில் மிகப் பற்றுக்கொண்டவர். எங்கள் வேண்டுகோளை நிராகரிக்க மாட்டார்."

"இந்த நாட்டின் பிரஜைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய சம்மதமின்றி இராஜ்யத்தை விநியோகிக்க யாருக்கு உரிமை உண்டு?"

"தங்களை அரசராகப் பெறுவதைப் பெறற்கரிய பேறாக இந்நாட்டுப் பிரஜைகள் கருதுவார்கள்."

"எல்லோரும் சம்மதிக்கலாம் மகிழ்ச்சியும் அடையலாம். இந்த உலகில் வேறு யாருடைய விருப்பத்தையும் காட்டிலும் நான் அதிகமாக மதிப்பது என் தமக்கையாரின் விருப்பத்தையே. என் அன்னை என்னைப் பெற்றாள் பொன்னி நதி என் உயிரைக் காப்பாற்றி அளித்தாள். ஆனால் என் தமக்கை என் அறிவை வளர்த்து, அகக் கண்களைத் திறந்தார். அப்படிப்பட்டவருடைய விருப்பதைக் காட்டிலும் என் உள்ளத்திலே உள்ள ஒரு குரலின் கட்டளையே எனக்கு மேலானது. மகா புருஷர்களே! தாங்கள் இச்சிறுவனுக்கு மனமுவந்து அளிக்கும் மகா பாக்கியத்தை ஏற்றுக் கொள்ளும்படி என் உள்ளக் குரல் எனக்குச் சொல்லவில்லை! தயவு செய்து இச்சிறுவனை மன்னித்து அருளுங்கள்!" மறுபடியும் அந்த மகாசபையில் சிறிது நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. வந்தியத்தேவனுடைய நாடி நரம்புகள் படபடவென்று துடித்த சத்தம் அவன் காதில் மட்டும் விழுந்தது.

சற்றுப்பொறுத்து, பிக்கு சங்கத்தின் அத்தியட்சகர் கூறினார்: "இளவரசே! தாங்கள் கூறிய மறுமொழி எனக்கு அதிக வியப்பை அளிக்கவில்லை ஒருவாறு எதிர்பார்த்தேன். இதனாலேயே இந்த இலங்கைச் சிங்காதனத்தில் ஏற எவரிலும் அதிகத் தகுதி வாய்த்தவர் தாங்கள் என்று ஏற்படுகின்றது. தர்ம சூக்குமத்தை உணர்ந்த எங்களுக்கு இதைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் கிடையாது. ஆனால் தங்களை வற்புறுத்தவும் விரும்பவில்லை. யோசிப்பதற்கு அவகாசம் கொடுக்கிறோம். ஓராண்டுக்குப் பிறகு இதே மாதிரி ஒரு நாள் தங்களுக்குச் சொல்லி அனுப்புகிறோம். அப்போது வந்து தங்கள் முடிவான கருத்தைத் தெரிவிப்பீராக! ஒரு விடயம் மட்டும் நினைவிருக்கட்டும். இந்தப் புராதன அநுராதபுரத்தில் பல புத்த விஹாரங்கள் மூர்க்கமான யுத்தக் கொடுமையினால் பாழாய்ப் போயிருக்கின்றன. ஆனால் இந்த மகா போதி விஹாரத்துக்கு மட்டும் எவ்விதச் சேதமும் இது வரை ஏற்படவில்லை. ஏனெனில் இது பூமிக்குக் கீழே குடைந்து அமைத்த விஹாரம்.


இங்கே வரும் வழி இவ்விடத்தில் தற்சமயம் கூடியிருக்கும் புத்த சங்கத் தலைவர்களுக்கு மட்டுமே தெரியும். எங்களில் ஒருவர் வழி காட்டாமல் இங்கே யாரும் வரமுடியாது. இலங்கை மன்னர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தடவை, புத்த சங்கத்தாரால் முடிசூடிக் கொள்வதற்கு மட்டுமே, இங்கு அழைக்கப்படுவார்கள். அத்தகைய புனிதமான இரகசியப் பாதையுள்ள விஹாரம் இது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கால் ஒடிந்த கொக்கு



முன்னொரு காலத்தில் ஏழை ஒருவனிருந்தான். அவனுக்குக் கொஞ்சம் நிலமிருந்தது. அதைத் தன் ஜீவனோபாயமாகக் கொண்ட அவன் இரவு பகலாகஅதில் பாடுபட்டு வந்தான்.

வசந்தபருவம் வந்தது. வழக்கம் போல நிலத்தை உழத் தொடங்கினான் அந்த ஏழை. அப்போது தற்செயலாக காயத்தை நோக்கினான் அவன். ஒரு கொக்கு பறந்து கொண்டிருப்பதைக் கண்டான். அந்தக் கொக்கு உழவோட்டப்பட்டிருந்த கழனியை நோக்கி வந்தது. ஆனால் அது உடனே பூமியில் தொப்பென்று விழுந்து விட்டது. அதைப் பார்த்து ஏழை அங்கு விரைந்து ஓடினான். அதன் சிறகு / ஒடிந்திருந்ததைக் கண்டு தன் வீட்டுக்கே அதை எடுத்துச் சென்றான்.

சிறகு ஒடிந்த அந்தக் கொக்குக்குத் [illegible] வீட்டில் சிகிச்சை அளிக்கத் தொடங்கினான் ஏழை. அது தனது இறகுகளை நன்றாகப் பயன்படுத்தத் தெம்பு ஏற்படும் வரைபேணிப் பராமரித்து வந்தான். பிறகு ஒருநாள் அந்தப் பறவை பறந்து போய் [illegible]

அந்த ஏழைக் குடியானன்ஊழவுவேலையை முடித்து, விதைப்பு ஆரம்பித்த போது, அந்தக் கொக்கு மறுபடி அவனது கழனி மீது பறந்து வந்தது. மூன்று முலாம் பழ விதைகளைக் கீழே போட்டது. அவன் அந்த விதைகளைப் பொறுக்கித் தனது நில த்தின் ஒரு கோடியில் விதைத்தான். சில நாட்களிலேயே அவை முளை விட ஆரம்பித்தன. அந்த ஏழைக் குடியானவன் அயர்வின்றிக் களையெடுத்தான். செடிகளுக்கு நீர் பாய்ச்சினான். சீக்கிரம்முலாம்பழங்கள் கனிந்து கிடந்தன. அவற்றில் மிகப் பெரிய மூன்று பழங்களைப் பறித்து மிக வும் சிரமப்பட்டு வீட்டுக்குக் கொண்டு போனான். அவை அவ்வளவு கனமாக இருந்தன.

வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்து நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்தான் அந்தக் குடியானவன். முலாம் பழங்களில் ஒன்றை எடுத்து, அதை நறுக்கி விருந்து படைக்க நினைத்தான். ஆனால் கத்தியினால் முலாம் பழத்தின் மேல் தோலைக் கூட அவனால் கிழிக்க முடியவில்லை. அவ்வளவு கெட்டியாக இருந்தது. மற்ற பழங்களை எடுத்து நறுக்க முயன்றான் அவற்றையும் நறுக்கமுடியவில்லை.

எனவே ஒரு பெரிய கத்தியை எடுத்துத் தன் பலத்தை யெல்லாம் சேர்த்து ஓங்கி ஒரு போடு போட்டான். முலாம் பழம் விரிசல் கண்டது. அதன்உள்ளே சாறு இருப்பதற்குப் பதிலாக, தங்க நாணயங் கள் இருந்தன. மற்ற இரண்டு, முலாம் பழங்களிலும் கூட தங்க நாணயங்கள் இருந்தன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே உண்மை வெற்றி பெறும். – ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட பகுதி மக்களை ஏமாற்ற நினைக்காதீர்கள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கத் தவறுவதில்லை.

அவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கின்ற அத்தனை வெளிநாட்டுத் தூதுவர்களும் வட மாகாணத்தின் அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளை வழங்குவோம் என உறுதிமொழி வழங்குகின்றனர்.

இந்த உறுதிமொழியை வெளிநாட்டுத் தூதுவர்கள் வழங்கியதாக ஒவ்வொரு சந்திப்பின் பின்னரும் வடக்கின் ஆளுநர் தெரிவிப்பது வழமை.

அந்த வகையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நெதர்லாந்தின் இலங்கைத் துணைத் தூதுவர் ருட்ஜென்ஸ், வடக்கின் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், வடக்கின் அபிவிருத்திக்குத் தேவையான பங்களிப்பை வழங்கத் தயார் எனக் கூறியுள்ளார்.

ஆக, வடக்கின் ஆளுநரைச் சந்தித்த அத்தனை வெளிநாட்டுத் தூதுவர்களும் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனராயின், அபிவிருத்தியில் வட மாகாணம் இலங்கையின் முதன்மையான மாகாணமாக விளங்கியிருக்க வேண்டும்.

ஆனால் இன்னமும் வட மாகாணம் போர் தந்த வடுக்களுடனேயே காலம் கடத்துகிறது.

அப்படியானால், வடக்கின் ஆளுநரைச் சந்திக்கின்ற தூதுவர்கள் வடக்கின் அபிவிருத்திக்கு உதவத் தயார் எனக் கூறினர் என்று ஆளுநர் கூறுவது; ஒரு கற்பனையோ என்ற சந்தேகம் வடபகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

அதாவது வடக்கின் அபிவிருத்திக்கு உதவத் தயார் என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் கூறுவார்களாயின்; அவர்கள் எந்த அபிவிருத்திக்கு உதவத் தயார். எந்தெந்த அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுமாறு ஆளுநர் அவர்களிடம் (தூதுவர்களிடம்) கோரிக்கை விடுத்துள்ளார் என்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இதைவிடுத்து வடக்கின் அபிவிருத்திக்கு உதவத் தயார் என்று பொதுமையில் கூறுவது எந்த வகையிலும் பொருத்துடையதல்ல.

தவிர, வடக்கு மாகாணத்தின் ஆளுநரை வெளிநாட்டுத் தூதுவர்கள் பலர் சந்தித்துள்ளனர். அவர்கள் அத்தனை பேரும் வட பகுதிக்கு உதவ முன்வந்துள்ளனரெனில், இதுவரையில் குறித்த தூதுவர்களின் நாடுகள் வடக்கில் எந்தெந்த அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி புரிந்துள்ளன என்பதை ஆளுநர் பட்டியல்படுத்துவது அவசியம்.

இதுதவிர, தன்னைச் சந்தித்த வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முன்வைத்த அபிவிருத்திப் பணிகள் எவை?

அந்த அபிவிருத்திப் பணியின் மூலம் வடபகுதி மக்களும் இளைஞர்களும் பெறக் கூடிய பயன் யாது? குறித்த அபிவிருத்தி உபாயத்தை முன்னுரிமைப்படுத்தியது யார்?

வெளிநாட்டுத் தூதுவர்கள் வடபகுதிக்கு வரும்போது அவர்களிடம் முன்வைக்கவுள்ள வடக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் எவை? என்ற விடயங்களை வடக்கின் ஆளுநர் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து, வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவத் தயார் என வெளிநாட்டுத் தூதுவர்கள் கூறியதாக வெளிவரும் செய்திகள் பொது அரங்கில் வடக்குக்கு எல்லா நாடுகளும் தாராளமாக உதவுகின்றன என்ற கருத்துருவாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

எனவே போரில் நொந்து போயுள்ள வடபகுதி மக்களை எவரும் ஏமாற்ற நினைக்காதீர்கள். அப்படி ஏமாற்றினால் அது பெரும் பாவம்.

# நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னமும் மீளவில்லை

## ரஞ்சித் மத்தும பண்டார

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பேச்சுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் இன்றும் ஏழ்மையில் தான் உள்ளார்கள்.

மக்களின் உரிமைகளை முடக்குவதற்காகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கத்தின் செயற்பாடுகள் அரசாங்கத்துக்கே எதிராக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் உரையை ஆளுந்தரப்பினர் கரகோசித்து வரவேற்கிறார்கள். பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது யார்? நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது யார்? என்பது தற்போது மறக்கடிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஒட்டுமொத்த மக்களும் மின் கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்சார சபை குறுகிய காலத்துக்குள் இலாபமடைந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் அதன் பயனை மக்களுக்கு வழங்க மறுக்கிறது. ஆகவே பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பேச்சளவுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்கான சட்டங்களை உருவாக்கியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டு மக்களின் வாய்களை மூடும் வகையில் தான் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நிகழ்நிலை காப்புச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முடக்குவதற்காக உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கி தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எடுக்கும் தவறான தீர்மானங்கள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குவதில் தாமதம்

## பொதுமக்கள் கடும் விசனம்

வவுனியா பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் அவற்றை பெற்றுக்கொள்ளச்சென்ற பொதுமக்கள் அந்தரிப்பிற்குள்ளாகினர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்றையதினம் வவுனியா பிரதேசசெயலகத்தில் அமைந்துள்ள மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் சென்றிருந்தனர்.

காலை 9 மணிக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மாலை 3 மணிவரை பொதுமக்கள் காக்க வைக்கப்பட்ட போதிலும் பலருக்கு சான்றிதழ்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களிற்கு உள்ளாகினர்.

அவசரத் தேவை நிமித்தம் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்திருந்தோம் எனினும் ஒருநாள் முழுவதும் நின்று கூட அதனை பெற்றுக்கொள்ள முடியவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த அலுவலகத்தில் அதிகமான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதால் தொடர்ச்சியாக இந் நிலைமை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தேவைக்கேற்ற ஊழியர்களை நியமித்து வினைத்திறனான புதிய முறைமை ஒன்றை உருவாக்கி அதனை சீர் செய்ய முடியும் என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7)

# வாகன விபத்தில் மாணவன் காயம்

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் பாதசாரி கடவையூடாக வீதியினை கடக்க முயன்ற மாணவனை மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவன் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

குறித்த விபத்தானது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள பாதசாரிகள் கடவையில் நேற்று இடம்பெற்றது

இவ் விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

துவிச்சக்கரவண்டியில் பாதசாரி கடவையூடாக வீதியினை கடக்க முயன்ற மாணவனின் துவிச்சக்கரவண்டி மீது நகரிலிருந்து ஏ9 வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் மாணவன் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளமையுடன் மாணவனின் துவிச்சக்கரவண்டியும் பகுதியளவில் சேதமடைந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 08:30 மணியிலிருந்து மாலை 17:00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** உடுவில், உடுவில் மகளிர் பாடசாலை, சங்குவேலி, தோட்டக்கலை பிறைவேற் லிமிடட் அரசடி சந்தி, சங்கானை, சங்கானை சந்தை, நிச்சாமம், வல்லை வீதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற வளாகம், அரசடி, மருதடி, ஆசிரியர் வீதி, சாவகச்சேரி நகரம், பிரதேச செயலகம் - சாவகச்சேரி, டச்சு வீதி, கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல் துர்க்கை அம்மன் கோவில், மீனாட்சி அம்மன் கோவில் சங்கத்தானை, நுணாவில், நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், பெருங்குளம் சந்தி, தபால் அலுவலகம் சந்தி, புகையிரத நிலைய வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** புளை காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மணவாளம்பட்டு முறிப்பு, சின்னசாளம்பன் (14 ஆவது மைல் கல்) 66ஆம் பிரிவு இராணுவ முகாம் - பூநகரி, அரசபுரம் இராணுவ முகாம், பிரதேச செயலகம் - பூநகரி, 66ஆம் பிரவு இராணுவ பயிற்சி பள்ளி - அரசபுரம், 4 ஆவது மைல் கல் பூநகரி, அரசபுரம், செல்லையாதீவு, ஞானிமடம், கௌதாரி முனை, காஞ்சிபுரம், கருக்காய்த்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர், பூநகரி, நெடுங்குளம் பள்ளிக்குடா, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடை சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய், பரந்தன் நகரம், செம்மண்குன்று, சின்னபல்லவராயன்கட்டு, தம்பிராய், தரணிக் குடியிருப்பு, வாடியடி, வெட்டுக்காடு (கௌதாரிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை) ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஹோட்டல் - ஒளியா, வசந்தி தியேட்டர், ஆவது குறுக்குத் தெரு, ஒஸ்ரியா ஸ்ரூடியோ, பஜார் வீதி, இலுப்பையடி சந்தி, கந்தசாமி கோவில் வீதி, குகன் மோட்டார்கள், 2வது குறுக்கு தெரு, மில் வீதி சந்தி, நெல்லி ஸ்ரார் விடுதி, பொலிஸ் நிலையம், பஸார் வீதி, இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார்குளம், சப்பிள்ளையார்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

20

### பச்சிலைப்பள்ளிமாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

பச்சிலைப்பள்ளி மாகாணம்4கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை யாவன:

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| (1) முகமாலை | Mogomale |
| (2) புலோப்பளை | Ploopalle |
| (3) தம்பகாமம் | Tambagamo |
| (4) முள்ளிப்பற்று | Moelepattoe |

ஒல்லாந்தர் மொத்தமாக 27 கிராமங்களை இந் 4 கோவில் பற்றுகளுக்குள் அடையாளப்படுத்தியிருந்தார்கள்.

### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

**(1) முகமாலை கோவில் பற்று (4 கிராமங்கள்):-**

முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி மற்றும் ஒரு கிராமம்.

**(2) புலோப்பளை கோவில் பற்று (4 கிராமங்கள்):-**

புலோப்பளை, சோரன்பற்று, பெரியபளை மற்றும் தர்மக்கேணி

**(3) தம்பகாமம் கோவில் பற்று (5 கிராமங்கள்):-**

தம்பகாமம்,மாசார், இத்தாவில், செம்பியன்பற்று மற்றும் வண்ணான்கேணி

**(4) முள்ளிப்பற்று கோவில் பற்று (14 கிராமங்கள்):-**

பெரிய பச்சிலைப்பள்ளி, கோயில்வயல், முகாவில், முள்ளியான், சங்கரத்தார்வயல், போக்கருப்பு, ஆழியவளை, மருதங்கேணி, உடுத்துறை, ஊரியான்பற்று, இயக்கச்சி, இறவிக்குளம் மற்றும் இரு கிராமங்கள்.

### யாழ் கலாசார மாற்றம்

டச்சுக்காரர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் போன்ற அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளினாலும் ஆட்சியினாலும், அரசியலில் மட்டும் அல்ல, சமுதாயத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால் தமிழர்களின் பண்பாட்டில் பல மாறுதல்கள் தோன்றின. ஆடை அணிதல், ஒப்பனை செய்தல், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயக்கோட்பாடுகள் முதலியவற்றில் பல மாறுதல்கள் தோன்றியுள்ளன. கல்லும் சுண்ணாம்பும் பயன்படுத்தி ஓட்டால் வேயப்படும் கட்டட மரபு ஒல்லாந்தர் காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தில் வழக்கிற்கு வந்ததென்று கூறுவர்.யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய கால வீடுகளைப் பார்த்தால் டச்சுக்காரரின் சிற்ப முறையைக் காணலாம். வீடுகளில் ஒரு "ஸ்தோப்பு" அல்லது விறாந்தையிருப்பது, விறாந்தையிலிருந்து "நடைகூடம்" அல்லது மண்டபத்துக்கு போகலாம். நடைகூடத்துக்கு அணித்தாக வீட்டில் உள்ளார் வசிக்கும் அறைகள் இருப்பது இவையெல்லம் டச்சுக்காரர் கலாசாரமென்றே கூறப்படுகின்றன.

ஒல்லாந்தர் 138 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை முழுமையாக ஆண்டபோதிலும், போர்த்துக்கேயச் சொற்களைப் போல், டச்சு மொழிச் சொற்கள் யாழ்ப்பாணத் தமிழில் அதிகம் இடம் பெறவில்லை எனினும் கிட்டத்தட்ட 50 டச்சு மொழிச் சொற்கள் தமிழ்மொழிக்குள் உள்வாங்கப் பட்டுள்ளன. அவற்றுன் சில: கக்கூசு, கந்தோர், தபால், நொத்தாரிசு, வெந்தீசு,கொந்தீசு, பூதல், போத்தல், இலாச்சி, இறாக்கை, ஸ்தோப்பு, கேத்தில், பிசுக்கால், வங்குறோத்து, திறைசேரி போன்றசில டச்சுச் சொற்கள் இன்னும் இங்கே புழக்கத்தில் இருக்கின்றன.

### தோம்பு என்னும் விபரக்கோவை

இலங்கையில் காணிப்பதிவேடுகள் மற்றும் பதிவுகளின் ஆரம்பம் மன்னர் ஆட்சிக் காலத்தை சார்ந்ததாகும். அக்காலத்தில் மன்னரினால் பௌத்த, இந்துக் கோவில்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் பற்றி கற்பாறைகளிலும் செப்புத் தகடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளுக்கு முன்னர் தனியார் காணிகளுக்கு ஓலையில் எழுதப்பட்ட "லேகம் மிற்றி" என அழைக்கப்படும் காணிப்பதிவேடு (நில இடாப்புக்கள்) சிங்கள மன்னர்களால் பேணப்பட்டது. இக்காணிப் பதிவை அடிப்படையாகக்கொண்டே தோம்புகள் எழுதப்பட்டன.

### போத்துக்கீசர் காலத்து தோம்புகள்

தோம்பு எழுதும் வேலைகள் இலங்கையின் கோட்டை இராச்சியம் போத்துக்கீசர் வசம் சென்றபின், வரி வசூலிப்பை ஒழுங்குபடுத்தும் முகமாகதொடங்கப்பட்டன. இதற்காக 1608ஆம் ஆம் ஆண்டில் Vendor da Fazenda என்ற வருமானவரி அதிகாரி போத்துக்கல்லிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அவர் தோம்புகளை எழுதியதோடு அத்தோம்புகளை காலத்திற்கு காலம் சரிசெய்து பாதுகாத்தும் வந்தார். கோட்டே இராச்சியத்துள் அடங்கியிருந்த 21, 873 ஊர்களுக்கான தோம்பு தயாரிக்கும் வேலை பல ஆண்டுகளாக நடைபெற்றது. நான்கு தொகுதிகளாகத் தயாரிக்கப்பட்ட கோட்டே இராச்சியத்துக்கான தோம்புகளில் இரண்டு தொகுதிகள் 1614 ஆம் ஆண்டிலும், எஞ்சிய இரண்டு தொகுதிகள் 1618 இலும் நிறைவுற்றன.

1619 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியம் போத்துக்கேயரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர், அதே ஆண்டிலேயே தோம்பு தயாரிக்கும் வேலைகளுக்கான ஆணை, கோவாவிலிருந்து பிறப்பிக்கப்பட்டது. இதற்காகக் கொழும்பிலிருந்து அதிகாரி ஒருவர் 1620ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். எனினும், யாழ்ப்பாணம் தொடர்ந்தும் குழம்பிய நிலையிலேயே காணப்பட்டதால், இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இறுதியாக 1623ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத் தோம்பு வேலைகள் தொடங்கப்பட்டதாயினும் பல காரணங்களால் ஒரு முழுமையான தோம்பு தயாரித்து முடிக்கப்பட்டு இருக்கவில்லை.

ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது இத் தோம்புகள் ஒல்லாந்தரின் கைக்குச் செல்லாதவாறு போர்த்துக்கேயரால் எரிக்கப் பட்டதாக கூறப்படுகிறது. மேலும் இவை ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்றும் கூறப்படுகிறது. ஒரு சில போர்த்துக்கேயர் காலத்து தோம்புகள் இப்போதும் போர்த்துக்கேயத்தின் தலைநகரான லிஸ்பனில் இருப்பதாகவும் அவை நுண்படமாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவற்றின் பிரதிகள் இலங்கை தேசிய ஆவணக்காப்பகத்தில் உள்ளது.

### ஒல்லாந்தர் காலத்து தோம்புகள்

ஒல்லாந்தர் காலத்து தோம்புகள் போர்த்துகேயர்களின் தோம்புகள் விட முன்னேற்றகரமானவை. முறைப்படியான மேலதிக தகவல்களைக் கொண்டிருந்தன. அவை டச்சு மொழியிலேயே எழுதப்பட்டன. அவை கோரளைகள், பற்றுகள் மற்றும் கிராமங்கள் அடிப்படையிலும் நிலங்களின் தன்மை, பயன்பாடு போன்றவற்றை கருத்தில்கொண்டும் தயாரிக்கப்பட்டன.

தோம்புப் பதிவுகள் இருவகையாக இருந்தன. அவை தலைத்தோம்பு மற்றும் நிலத்தோம்பு ஆகும். ஒருகுடும்பக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரங்களைத் தலைத்தோம்புகொண்டிருந்தது. இந்தகுழுக்களுக்கு சொந்தமான நிலத்தின் பங்குகளை/உரிமைகளை நிலத்தோம்பு விபரிக்கிறது. தோம்பு என்பது பொதுவாக காணிப்பதிவை குறிப்பிட்டாலும் மற்றைய பதிவுகளும் தோம்பு என்றே அழைக்கப்பட்டன. உதாரணமாக டச்சு பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பதிவுகள் உள்ளடங்கிய பட்டியல் பாடசாலைத் தோம்பு எனப்பட்டது. பொதுவாக கூறின் தோம்புகள் நிலத்தின் பரப்பளவு, மக்கள் தொகை, அவர்கள் செய்ய வேண்டிய சேவை, அவர்கள் நிலத்திற்கு செலுத்த வேண்டிய கடமை, குடியிருப்பாளரின் நிலங்கள் மற்றும் எந்த சலுகைகளை அவர்கள் கொண்டிருக்கின்றனர் போன்ற விபரங்களைக் காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டன.

ரோமன் கத்தோலிக்க தேவாலய நிலப் பகுதிகளை தோம்பில் பட்டியனிடவில்லை. ஆனால் பௌத்த ஆலய நிலங்கள் இந்துக் கோவில்கள் தோம்புப்பதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. கோவில் அதிகாரிகள் தங்கள் நிலங்களைக் காப்பாற்ற உரிமையை நிரூபிக்க வேண்டியிருந்தது. அவர்கள் டச்சு ஈஸ்ட் இந்திய கம்பெனிக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. பொதுமக்கள் சரியான தகவல்கள் வழங்காததாலும் உளளூர் அதிகாரிகள் பக்கச்சார்பாக நடந்து கொண்டதாலும் எழுதப்பட்ட தோம்புகளில் பல குறைபாடுகள் இருந்தன.

ஆரம்பத்தில் தோம்புகள் நிலத்தை பார்வையிட்டு/ஆய்வுசெய்து எழுதப்பட்டன. எந்த நில அளவையும் செய்யப்படவில்லை. ஆனால் 1740இல் எழுதப்பட்ட தோம்புகள் காணி அளவீட்டுப்படங்களுடன் எழுதப்பட்டன. இது இலங்கை வரலாற்றில் காணி உரிமை மற்றும் காணிச் சட்டத்தில் பெரியவொரு மாற்றத்தை உருவாக்கியது. இதன் மூலம் காணியின் பரப்பை சரியாக காணக்கூடியதாக இருந்தது. ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியால் அளவீடுகளை அடிப்படையாகக் கொண்ட பதிவு செய்யப்படுவது மிகவும் சிறந்தது எனக் கருதப்பட்டது. யாழ்ப்பாணத் தோம்பு பல தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. யாழ்பாணக் குடாநாடு மற்றும் தீவுப் பகுதிகளை உள்ளடக்கி 7 தொகுதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

இவை மொத்தமாக 2900 கோப்புகளை உள்ளடக்கி இருந்ததாக கூறப்படுகிறது . இக் கோப்புகள் அனைத்தும் டச்சு அரசின் காலத்தில் கடைசி தடவையாக 1754 இல் மறுசீரமைக்கப்பட்டது .இவற்றின் மூலப்பிரதியை யாழ்ப்பாணக் கச்சேரியில் சிறப்பு உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 மில்லியன்...

செய்யப்பட்ட முட்டை வட் வரி அதிகரிப்புடன் 43 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

யானை ஒன்று நேற்று சடலமாக மீட்கப்பட்டது.

வவுனியா, புளியங்குளம், பழைய வாடிப் பகுதியில் உள்ள தனியார் பண்ணைக் காணியில் யானை ஒன்று இறந்து கிடப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தார்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் இறப்பு தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்த யானை 24 வயது மதிக்கத்தக்கது எனத் தெரிவிக்கப்படுவதுடன், சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் அக்காணியின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## திருகோணமலை...

அதிகாரிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினேன்.

இதன்போது, நாகபட்டினம் - திருகோணமலை ஆகியவற்றை இணைக்கும் எண்ணெய்க் குழாய் அமைப்பு தொடர்பான ஐஓசி மூலமான இந்திய அரசின் முன்மொழிவு குறித்து விவாதித்தோம்.

பொறிமுறையை முடிவு செய்ய தொழில்நுட்ப ஆய்வுகள், சந்தை பகுப்பாய்வு, நிதிப் பகுப்பாய்வு மற்றும் வணிக மாதிரிகள் நடத்தப்படும்.

திருகோணமலை எண்ணெய்த் தொட்டி பண்ணை, இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் (CPSTL) லங்கா ஐஓசியின் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் கூட்டு முயற்சியின் கீழ் முதலீடுகள் மற்றும் திட்டங்களின் விரிவாக்கம் குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம் என எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதியின்...

வொரு வார்த்தையும் பேசாதது தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை தந்துள்ளது என தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சமாதானத்தின் கதவுகள் இலங்கையில் இறுக மூடப்பட்டிருக்கின்றது. உலகத்தை பல தடவைகள் இலங்கையின் தலைவர் ஏமாற்றியிருக்கின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## யாழ்.பல்கலை...

வர்களின் விபரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக இணையத்தை (https://www.jfn.ac.lk/38th-convocation-graduands-list/) பார்வையிட முடியும். (ம-7,33)

## 12 உணவகங்கள்...

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

அதில் குறைபாடுகள் இனங்காணப்பட்ட 12 உணவகங்கள் மீது வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டது. பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜே.பிரகலாதன் 3 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து 69 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

ஆனைக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கு.பாலேந்திரகுமார் 9 உணவகங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 86 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் இரு உணவகங்களினை சீல் வைத்து மூடவும் மல்லாகம் நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்தியாவுடன்...

மாற்றுவதற்கு, இந்தியாவுடனான புதிய தரைவழித் தொடர்புகளுக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய

# ஒரு வேளை உணவுக்கே மக்கள் திண்டாடும் நிலை - மைத்திரி

(கொழும்பு)

இந்த நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

மூன்று வேளையில் ஒரு வேளை உணவைக்கூட பெற முடியாத மக்கள் நாளாவிய ரீதியில் பல பகுதிகளில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, உணவு உற்பத்தியை அதிகரிப்பதே முதன்மையாகச் செய்யப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்காமல் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியாது என்றார். (ம-7)

வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் வெப்பமயமாதல் மற்றும் கடல் மட்டம் உயர்வதன் அபாயத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்க மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்குக் காலநிலை நீதியை உறுதிப்படுத்த வெப்ப வலய காலநிலை முன்முயற்சிகள் மற்றும் சர்வதேச காலநிலை பல்கலைக்கழகம் போன்ற முன்முயற்சிகளையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்து சமுத்திரத்தின் சவால்களை எதிர்கொள்ளவும் பாதுகாப்பான நிலையான கடல் சூழலை உருவாக்கவும் இந்து சமுத்திர எல்லை நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் எனவும், பரந்துபட்ட இந்து சமுத்திர வலயத்தை கட்டமைக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம-7)

## முற்ற...

முற்றவெளி மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஹரிகரனின் இசை நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அலையெனத் திரண்டிருந்தனர்.

மக்கள் தடுப்புக்களை உடைத்துக் கொண்டு சென்றதால் கட்டுக்கடங்காத சன நெருக்கடியோடு குழப்பமும் ஏற்பட்டது.

சன நெருக்கடியினைத் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

ஹரிகரனின் இசை நிகழ்வை முன்னிட்டு தென்னிந்திய நடிகர்களான தமன்னா, யோகிபாபு, சிவா, கலாமாஸ்டர் உட்படப் பலர் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளனர்.

இளைஞர்கள் பலர் பனை மரத்தில் ஏறி நின்று இசை நிகழ்வை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 0211
W 7 6 7 2 1 7 W

தன நிதானய
திகதி - 2024.02.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1415
B 15 46 49 61 B
41430

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3627
சீட்டிழுப்பு திகதி 09.02.2024
Q 01 08 28 59
Q
35067

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 0694
மிதுனம் 27 40 47 56 மிதுனம்
08702 09

மஹஜன சம்பத
திகதி 2024/02/09
சீட்டிழுப்பு இலக்கம் 5385
T 9 1 8 5 0 6

மெகா பவர்
திகதி 09/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1733
H 04 10 26 39 46
05819

சுப்பர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 09.02.2024 வெற்றி வாரம் 093
H 5 4 0 2 6 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,649,180.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

கப்ருக
O 14 40 48 56 69
1535
09.02.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 503,957,356.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2359 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.09 தினம் வெள்ளிக்கிழமை
01 02 39 51 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,632,208.00

சனிதா
திகதி 2024.02.09 வெற்றி வாரம் 4520 வர்ணம் செம்மஞ்சள்
05 14 21 47 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,705,146.40

சசிரி
வெற்றி வாரம் 439
சீட்டிழுப்பு திகதி 2024.02.09
பச்சை
05 14 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,244,320/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4071 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.09 தினம் வெள்ளிக்கிழமை
01 06 33 45 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,406,749.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2185
சீட்டிழுப்பு திகதி : 2024.02.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,872,205.60
02 04 25 70 B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8318)


# கலைவிழா

(கொக்குவில்)

கொக்குவில் தலையாழி அருள் மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழாவின் நிறைவையொட்டி தலையாழி ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் கலைவிழா நிகழ்வானது இன்று மாலை 5.15 தொடக்கம் இரவு 9.00 மணி வரை இடம்பெறவுள்ளது. சனசமூக நிலைய தலைவர் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வைத்திய கலாநிதி ப.சத்தியகுமார் அவர்களும் விஷேட விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் கௌரவ விருந்தினராக ஆலய நிர்வாக சபைத் தலைவர் வைத்திய கலாநிதி நி.ஜமுனானந்தா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)


## கடைக் கட்டடம் வாடகைக்கு

கோண்டாவில் ராஜா பிளாசா கட்டடத் தொகுதியில் 50 அடி பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 45 அடி நீள (2250 சதுர அடிகள்) கொண்ட கடையும் இதேபோன்று 12 அடி வீதி முகப்பாகவும் 45 அடி நீள (540 சதுர அடிகள்) விஸ்தீரணம் கொண்ட கடையும் வாகனத்தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு. பூட்சிற்றி, அரச, தனியார் நிறுவனங்களுக்கு மிகவும் ஏற்ற இடம்.

இல.74A, பலாலி வீதி, கோண்டாவில்

**077 615 9631**

(18905)

## வாடகைக்கு வீடு தேவை

கொக்குவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், ஆனைக்கோட்டை, கூழாவடி, மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளை அண்மித்த ஊர்களிலும் இணைந்த குளியலறை விரும்பத்தக்கது. குடும்பத்திற்கு.

**077 935 2274**
**071 402 8974**

(18947)

## அரிசி, தானியங்களை அரைப்பவர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 10" மற்றும் 12" கிறைண்டர். 230Kg எடை கொண்டதும் உதறல்கள் அற்றதுமான, இந்தியன் மோட்டர் 5 HP மற்றும் 7.5 HP இல் இயங்கக்கூடிய புலட் மொடல் (மட்டை வைக்கத் தேவையில்லை) கிறைண்டர் உத்தரவாதத்துடன் இப்பொழுது எம்மிடம்

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917



(18949)

## வெதுப்பக (Bakery) வேலைக்கு வேலை ஆட்கள் தேவை

புதுக்குடியிருப்பு முல்லைவீதியில் 7 ஆம் வட்டாரத்தில் இயங்கிவரும் தீன் சுவை (பேக்கரி) வெதுப்பக வேலைக்கு வேலையாட்கள் தேவை.

**077 305 6733**

எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-8313)

## Techna
Technical Institute

க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

**இலவச செயன்முறை வகுப்புக்கள்**

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்**

**A/L 2023 பிரிவு** — பிரிவு 02 ஆரம்பம் — 13.02.2024 மாலை 2.00 PM

அனைத்து செயன்முறைகளும் இறுதிப்பரீட்சை காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்...

இலவச செயன்முறை **A/L 2024 பிரிவு** — ஆரம்பம் 14.02.2024 மாலை 3.00 PM

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். | Technatechnicalinstitute | 077 170 3549

(18954)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269 /= | Max 5Kg | |
| 1 Kg றவை | - 284 /= | | |
| 1 Kg அரிசி மா | - 195 /= | | |
| 1 Kg கோதுமை மா | - 183 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 187 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 298 /= | Max 5Kg | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - 164 /= | | |
| 1 Kg பெரிய கடலை | - 619 /= | | |
| 10 Kg விஜிதா ஆட்டக்காறி | - 2110 /= | | |
| 01 Lux Rose Soap | - 145 /= | ~~175/=~~ | |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140 /= | ~~175/=~~ | |
| 1 Kg சன்லைட் பவுடர் | - 399 /= | ~~450/=~~ | |
| 180g Protinex | - 1799 /= | ~~2000/=~~ | |
| 01 அங்கர் யோக்கட் | - 50 /= | ~~80/=~~ | |
| 425g Supiri ரின்மீன் | - 490 /= | ~~850/=~~ | |

1040/=




~~1080/=~~
Max - 02

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(18956)


# புகழ் வணக்கம்

தமிழ் மாணவர்களின் விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்காகப் பல இலட்சங்கள் ரூபா பெறுமதியான தனக்குச் சொந்தமான ஆதனத்தை தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாற்றின் கட்டடத்தை அமைப்பதற்காகத் தானமாக வழங்கிய தொண்டைமானாற்றின் கொடை வள்ளல் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் பிரதம குருக்களில் ஒருவரான

## சிவஸ்ரீ. தங்கராசா ஐயர் அகிலேந்திர ஐயர்



அவர்கள் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் ஜீவசமாதி அடைந்து சந்நிதியானின் தாள் சேர்ந்துவிட்டார் என்ற செய்தி மனிதத்தை நேசிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் மாறாத்துயரத்தை ஏற்படுத்திவிட்டது. சந்நிதி முருகனின் தாளடி சேர்ந்த சிவஸ்ரீ த.அகிலேந்திர ஐயருக்கு எங்கள் புகழ் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அவரது பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தேசிய வெளிக்கள நிலையம். தொண்டைமானாறு சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து. அன்னாரின் ஆத்மா முருகப்பெருமானின் பாதார விந்தங்களில் இளைப்பாற வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில் 20.07.1954 — முருகன் அடியில் 09.02.2024

**தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு.**

(C-8317)

# தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

ஆரம்பம் : 28.03.2024 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 16

**தரிசிக்கும் இடங்கள் :** உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம் பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர், சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமாரி, சுசீந்திரம், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சாமதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :** இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர் 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வருவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

**மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத் தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)**

**"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"**

(18936)

தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
**077 768 0102, 077 736 2154**

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

## யோ.சிவகௌரி

(முகாமைத்துவ உதவியாளர் - கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி)

(திதி - 10.02.2024 வளர்பிறை பிரதமை)

தாய்மடியில் : 20.10.1986
இறையடியில் : 09.02.2016

மூன்று தசாப்தத்தில் முழுமதியாகிவிட்டு
முந்தி விட்டாய் எமை பிரிய
காலங்கள் எட்டாண்டு கடந்து விட்டாலும்
கனக்கிறது உன் நினைவால்
அம்மா... சித்தா... அத்தை...
என சிறுசுகளின் மழலை மொழி கேட்க நீ இங்கில்லை
ஆனாலும் உன்நாமம் உரைக்காத நாளில்லை
எம் எண்ண அலைகள் உம் நினைவுடனே
ஆத்மா சாந்திக்காய் கேதார நாதனை
இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 37/03, கணேசபுரம், கிளிநொச்சி. — குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org